# செலக்சன்

## 7

## தமிழ்

www.Padasalai.Net

அன்பு நிலையம்
மதுரை - 625001

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# செலக்சன்

7

## ஏழாம் வகுப்பு

## தமிழ்

மூன்று பருவங்களும் இணைந்தது

முதல் பருவம் + இரண்டாம் பருவம் + மூன்றாம் பருவம்

94430 43338
94430 46662

வெளியிடுபவர்
அன்பு நிலையம்
129, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625001.

விலை ₹ 160

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பொருளடக்கம்

### முதல்பருவம்


| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி * | 5 |
| 1. | மொழி | 1.அ. எங்கள் தமிழ் * –செய்யுள் | 7 |
| | | 1.ஆ. ஒன்றல்ல இரண்டல்ல –செய்யுள் | 10 |
| | அமுதத்தமிழ் | 1.இ. பேச்சுமொழியும் எழுத்துமொழியும் –உரைநடை | 13 |
| | | 1.ஈ. சொலவடைகள் –துணைப்பாடம் | 15 |
| | | 1.உ. குற்றியலுகரம், குற்றியலிகரம் – இலக்கணம் | 17 |
| | | 1.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 19 |
| | | 1.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 22 |
| 2. | இயற்கை | 2.அ. காடு * –செய்யுள் | 24 |
| | | 2.ஆ. அப்படியே நிற்கட்டும் அந்த மரம் –செய்யுள் | 27 |
| | அணிநிழல் காடு | 2.இ. விலங்குகள் உலகம் –உரைநடை | 29 |
| | | 2.ஈ. இந்திய வனமகன் –துணைப்பாடம் | 32 |
| | | 2.உ. நால்வகைக் குறுக்கங்கள் – இலக்கணம் | 33 |
| | | 2.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 35 |
| | | 2.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 38 |
| | | 2.ஏ. திருக்குறள் * –செய்யுள் | 40 |
| 3. | நாடு, சமூகம் | 3.அ. புலிதங்கிய குகை * –செய்யுள் | 43 |
| | | 3.ஆ. பாஞ்சை வளம் –செய்யுள் | 45 |
| | நாடு அதை நாடு | 3.இ. தேசியம் காத்த செம்மல் பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர் –உரைநடை | 47 |
| | | 3.ஈ. கப்பலோட்டிய தமிழர் –துணைப்பாடம் | 49 |
| | | 3.உ. வழக்கு – இலக்கணம் | 50 |
| | | 3.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 52 |
| | | 3.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 54 |


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இரண்டாம் பருவம்



| வ.எண் | இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி * | 57 |
| 1. | அறிவியல் | 1.அ. கலங்கரை விளக்கம் * – செய்யுள் | 59 |
| | தொழில் | 1.ஆ. கவின்மிகு கப்பல் – செய்யுள் | 61 |
| | நுட்பம் | 1.இ. தமிழரின் கப்பற்கலை – உரைநடை | 64 |
| | அறிவியல் | 1.ஈ. ஆழ்கடலின் அடியில் – துணைப்பாடம் | 67 |
| | ஆக்கம் | 1.உ. இலக்கியவகைச் சொற்கள் – இலக்கணம் | 69 |
| | | 1.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 71 |
| | | 1.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 74 |
| 2 | | 2.அ. இன்பத்தமிழ்க் கல்வி – செய்யுள் | 76 |
| | கல்வி | 2.ஆ. அழியாச் செல்வம் * – செய்யுள் | 79 |
| | ஓதுவது | 2.இ. வாழ்விக்கும் கல்வி – உரைநடை | 81 |
| | ஒழியேல் | 2.ஈ. பள்ளி மறுதிறப்பு – துணைப்பாடம் | 83 |
| | | 2.உ. ஓரெழுத்து ஒரு மொழி,பகுபதம், பகாப்பதம் – இலக்கணம் | 86 |
| | | 2.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 88 |
| | | 2.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 91 |
| 3 | | 3.அ. ஒரு வேண்டுகோள் – செய்யுள் | 93 |
| | கலை, | 3.ஆ. கீரைப்பாத்தியும் குதிரையும் * – செய்யுள் | 95 |
| | அழகியல், | 3.இ. பேசும் ஓவியங்கள் – உரைநடை | 97 |
| | கலை | 3.ஈ. தமிழ் ஒளிர் இடங்கள் – துணைப்பாடம் | 99 |
| | வண்ணம் | 3.உ. தொழிற்பெயர் – இலக்கணம் | 101 |
| | | 3.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 102 |
| | | 3.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 104 |
| | | 3.ஏ. திருக்குறள் * – செய்யுள் | 106 |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



மூன்றாம் பருவம்


| வ.எண் | பொருண்மை/ இயல் | பாடத்தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|
| | | மனப்பாடப்பகுதி * | 108 |
| 1. | நாகரிகம் | 1.அ. விருந்தோம்பல் –செய்யுள் | 110 |
| | தொழில் | 1.ஆ. வயலும் வாழ்வும் –செய்யுள் | 112 |
| | வணிகம் | 1.இ. திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி –உரைநடை | 114 |
| | நயத்தகு | 1.ஈ. திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் –துணைப்பாடம் | 118 |
| | நாகரிகம் | 1.உ. அணி இலக்கணம் – இலக்கணம் | 119 |
| | | 1.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 121 |
| | | 1.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 124 |
| 2 | அறம், | 2.அ. புதுமை விளக்கு * –செய்யுள் | 127 |
| | தத்துவம், | 2.ஆ. அறம் என்னும் கதிர் * –செய்யுள் | 130 |
| | சிந்தனை | 2.இ. ஒப்புரவு நெறி –உரைநடை | 132 |
| | | 2.ஈ. உண்மை ஒளி –துணைப்பாடம் | 135 |
| | ஒப்புரவு | 2.உ. அணி இலக்கணம் – இலக்கணம் | 137 |
| | ஒழுகு | 2.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 138 |
| | | 2.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 140 |
| | | 2.ஏ. திருக்குறள் * –செய்யுள் | 142 |
| 3 | | 3.அ. மலைப் பொழிவு –செய்யுள் | 144 |
| | மனிதம், | 3.ஆ. தன்னை அறிதல் –செய்யுள் | 146 |
| | ஆளுமை | 3.இ. கண்ணியமிகு தலைவர் –உரைநடை | 148 |
| | | 3.ஈ. பயணம் –துணைப்பாடம் | 151 |
| | மானுடம் | 3.உ. ஆகுபெயர் – இலக்கணம் | 152 |
| | வெல்லும் | 3.ஊ. மொழியை ஆள்வோம் – மொழிப்பயிற்சி | 155 |
| | | 3.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி | 157 |


www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# செலக்சன்

## ⑦ ஏழாம் வகுப்பு

## தமிழ்

## முதல் பருவம்

www.Padasalai.Net

**மனப்பாடப்பகுதி**

**இயல் –1**

**எங்கள் தமிழ்**

"அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்"

**– நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## இயல் –2

### காடு

" பச்சை மயில் நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும் – கிளியே
நரியெலாம் ஊளையிடும்

அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ – கிளியே
பூங்குயில் கூவுமடி !

சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ – கிளியே
இயற்கை விடுதியிலே !" – சுரதா

### திருக்குறள்

**புறங்கூறாமை**

4. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

**வாய்மை**

7. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

9. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

**இறைமாட்சி**

10. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு. – திருவள்ளுவர்

## இயல் –3

### புலிதங்கிய குகை

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன் ஒரும்
புலிசேர்ந்து போகியகல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே*

– காவற்பெண்டு

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் ஒன்று

## மொழி

## 1. அமுதத் தமிழ்

இயல் ஒன்று

## கவிதைப்பேழை

## 1.அ. எங்கள் தமிழ் –செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. நெறி என்னும் சொல்லின் பொருள் ..........**

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம் **விடை : அ) வழி**

**2. "குரலாகும்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ............**

அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும்
இ) குர + லாகும் ஈ) குர + ஆகும் **விடை :ஆ)குரல் + ஆகும்**

**3. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............**

அ) வான்ஒலி ஆ) வானொலி
இ) வாவொலி ஈ) வானெலி **விடை :ஆ) வானொலி**

---

**II. நயம் அறிக.**

**1. "எங்கள் தமிழ்" பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

**(எ.கா)** அருள்நெறி
அதுவே

**விடை : அடிமோனை :** 1. பொருள் போற்றா 2. கொல்லா கொள்கை 3. எல்லா என்றும் 4. அன்பும் அச்சம்

---

**2. "எங்கள் தமிழ்" பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

**(எ.கா)** அருள்
பொருள்

**விடை : அடிஎதுகை :** 1. கொல்லா எல்லா 2. அன்பும் இன்பம்

---

**3. "எங்கள் தமிழ்" பாடலில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.**

**(எ.கா)** தரலாகும் குரலாகும் **விடை :** 1.புகழாது இகழாது 2. குறியாக நெறியாக 3. ஊக்கிவிடும் போக்கிவிடும்

---

**III. குறுவினா.**

**1. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை ?**

**விடை : தமிழ் மொழியின் பண்புகள்:**

★ தமிழ் மொழி அருள்நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது. அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. தமிழ் மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

**விடை :**

★ தமிழ் மொழியைக் கற்றவர்கள் பொருளைப் பெறுவதற்காக மட்டுமே யாரையும் புகழ்ந்திடவும் மாட்டார்கள். அதுபோலவே தம்மைப் போற்றாதவர்களை இகழ்ந்திடவும் மாட்டார்கள்.

**IV. சிறுவினா**

**1. "எங்கள் தமிழ்" பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.**

**விடை : எங்கள் தமிழ் :**

★ நம் தாய்மொழி தமிழ் மொழி அருள்நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது. அதுவே தமிழ் மக்களின் குரலாக விளங்குகிறது.

★ தமிழ் மொழியைக் கற்றவர்கள் பொருளைப் பெறுவதற்காக மட்டுமே யாரையும் புகழ்ந்திடவும் மாட்டார்கள். அதுபோலவே தம்மைப் போற்றாதவர்களை இகழ்ந்திடவும் மாட்டார்கள்.

★ அவர்கள் கொல்லாமை நோன்பை குறிக்கோளாகவும், உண்மை பேசுதலை கொள்கையாகவும் கொண்டு வாழ்வர்.

★ எல்லா மனிதர்களும் தம்மைப் போல அன்பெனும் வழியில் இன்புற்று வாழ விரும்புவர்.

★ தமிழ்மொழி அன்பையும் அறத்தையும் ஊக்கப்படுத்தி அச்சத்தைப் போக்கிவிடும்.

★ ஒலியோடு வானில் பொழியும் இன்பமான மழையைப் போல இனிய ஓசையோடு நாவிலிருந்து ஒலிக்கின்றது எங்கள் தேன் தமிழ்.

**V. சிந்தனை வினா.**

**கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார் ?**

**விடை :** ★ தமிழ் மொழி கற்பதற்கு இனிமையான மொழியும், நீண்ட காலம் அழியாமல் நிலைத்து நிற்கும் மொழி என்பதனால் கவிஞர் தமிழை தேனுடன் ஒப்பிடுகிறார்.

★ (எ.கா) : செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே.

## கூடுதல் வினாக்கள் – விடைகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. தமிழர்களின் குறிக்கோள்**

அ) கல்லாமை ஆ) இல்லாமை

இ) வெல்லாமை ஈ) கொல்லாமை **விடை : ஈ) கொல்லாமை**

**2. காந்தியக் கவிஞர் என்று அழைக்கப்படுபவர்**

அ) வெ.இராமலிங்கனார் ஆ) நா. வானமாமலை

இ) இரா.பி. சேது ஈ) வீ. முனுசாமி **விடை : அ) வெ. இராமலிங்கனார்**

**3. வெ. இராமலிங்கனாரின் சிறப்புப் பெயர்**

அ) காளமேகப் புலவர் ஆ) பகுத்தறிவு கவிராயர்

இ) நாமக்கல் கவிஞர் ஈ) மக்கள் கவிஞர் **விடை : இ) நாமக்கல் கவிஞர்**

**4. "பொழிகிற" என்னும் சொல்லின் பொருள்**

அ) விழுகின்ற ஆ) தருகின்ற

இ) பெறுகின்ற ஈ) எழுகின்ற **விடை : ஆ) தருகின்ற**

**5. "புகழாது" என்னும் சொல்லின் எதிர்ச்சொல்**

அ) மலராது ஆ) இகழாது

இ) குறையாது ஈ) தளராது **விடை : ஆ) இகழாது**

**6. "தமிழெனும்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது**

அ) தமிழ் + ழெனும் ஆ) தமிழ் + எனும்

இ) தமிழே + எனும் ஈ) தமி + ழெனும் **விடை : ஆ) தமிழ் + எனும்**

**7. "அன்பு + அறம்" என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) அன்புஅறம் ஆ) அன்புறம்

இ) அன்பறம் ஈ) அன்பஅறம் **விடை : இ) அன்பறம்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் ஒன்று

## கவிதைப்பேழை

## 1.ஆ. ஒன்றல்ல இரண்டல்ல – செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ................**

அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி **விடை : இ) பரணி**

**2. வானில் ............ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.**

அ) அகில் ஆ) முகில் இ)துகில் ஈ) துயில் **விடை : ஆ) முகில்**

**3."இரண்டல்ல"என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............**

அ) இரண்டு + டல்ல ஆ) இரண் + அல்ல

இ) இரண்டு + இல்ல ஈ) இரண்டு + அல்ல **விடை :ஈ) இரண்டு + அல்ல**

**4."தந்துதவும்"என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............**

அ) தந்து + உதவும் ஆ) தா+ உதவும்

இ) தந்து + தவும் ஈ) தந்த + உதவும் **விடை : அ) தந்து + உதவும்**

**5. ஒப்புமை + இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............**

அ) ஒப்புமை இல்லாத ஆ) ஒப்பில்லாத

இ) ஒப்புமையில்லாத ஈ) ஒப்புஇல்லாத **விடை : இ) ஒப்புமையில்லாத**

---

**II. குறுவினா.**

**1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை ?**

**விடை : தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாக கவிஞர் கூறுவன :**

★ தமிழ்நாட்டில் வீசும் தென்றலில் இன்சுவை தேன் மணம் கமழும்.

★ சுவைமிகு பழுத்த கனிகளும், பொன்னைப் போன்ற தானியக் கதிர்களும் விளைந்திருக்கும்.

★ நன்செய் நிலங்கள் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

---

**2. "ஒன்றல்ல இரண்டல்ல" – பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**

**விடை :**

★ பற்றிப் படர்வதற்குக் கொழுகொம்பின்றி தவித்த முல்லைக் கொடிக்குத் தான் ஏறிவந்த தேரில் முல்லைக் கொடியை படரச் செய்து தன் தேரினை அதற்கு அளித்தான் பாரி வள்ளல்.

★ தனது தம்பி இளங்குமணனால் நாடுகடத்தப்பட்ட குமணனின் தலையைக் கொண்டு வருவோருக்குத் தக்க பரிசு வழங்கப்படும் என்று இளங்குமணன் அறிவித்திருந்தான்.

★ அப்போது குமணனிடம் பரிசில் கேட்ட புலவர் பெருந்தலைச் சாத்தனாருக்குத் தன்னிடம் கொடுக்க தன்னைத் தவிர ஒன்றுமில்லை.

★ எனவே தன் வாளைக் கொடுத்துத் தன் தலையை வெட்டி எடுத்துத் தனது தம்பியிடம் கொடுத்து பரிசில் பெறுமாறு கூறினான் குமண வள்ளல்.

---

**III. சிறுவினா.**

**1. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?**

**விடை : தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகள்:**

★ ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரர்களின் வெற்றியைப் பாடும் பரணி இலக்கியம்.

★ பலரால் பாடப்பட்டு ஒருசேரத் தொகுக்கப்பட்ட எட்டுத்தொகை.

★ பண்ணிசைப் பாடல்களைக் கொண்ட பரிபாடல்.

★ பலவகைப் பாக்கள் கலந்து பாடப்பட்ட கலம்பகம்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**2. நம் தாய்மொழியைச் சிதையாமல் காக்கும் வழி யாது ?**
**விடை :** ஊடகங்களிலும், இலக்கியங்களிலும் திருத்தமான தமிழைப் பயன்படுத்தினால் நம் தாய்மொழியைச் சிதையாமல் காக்க முடியும்.

**IV. சிறுவினா.**

**1. மொழி பற்றி மு. வரதராசனாரின் கருத்துக்கள் யாவை ?**
**விடை :**
★ பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்தநிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும்.
★ இவையே அன்றி வேறுவகை மொழி நிலைகளும் உண்டு.
★ எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும்.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சு வழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்து வழக்குத் தொடர்களை எழுதி வருக.**

**(எ.கா) பேச்சு மொழி : அம்மா! பசிக்கிது எனக்குச் சோறு வேணும்.**
**எழுத்து மொழி : அம்மா! பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.**

**விடை :**
1. **பேச்சு மொழி :** நாளைக்குநான் ஊட்டுக்கு வரேன்.
   **எழுத்து மொழி :** நாளைக்கு நான் வீட்டிற்கு வருகிறேன்.
2. **பேச்சு மொழி :** மாடு வருது கதவ மூடு.
   **எழுத்து மொழி :** மாடு வருகிறது கதவை மூடு.
3. **பேச்சு மொழி :** நீங்கள் வேலக்கி போகலயா ?
   **எழுத்து மொழி :** நீங்கள் வேலைக்குப் போகவில்லையா ?

**2. பேசும்போது சில நேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. "ஆ" என்னும் எழுத்து இகரமாக மாறுவதும் உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்து வழக்குச் சொற்களையும் எழுதுக.**

**(எ.கா) சொல்லு – சொல் வந்தியா – வந்தாயா ?**
**நில்லு – நில் சாப்ட்டியா – சாப்பிட்டாயா ?**

**விடை :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கேளு | – | கேள் | கேட்டியா | – | கேட்டாயா ? |
| பாலு | – | பால் | போனியா | – | போனாயா ? |
| பல்லு | – | பல் | நின்னியா | – | நின்றாயா ? |
| வில்லு | – | வில் | ஓடினியா | – | ஓடினாயா ? |

**விரிவானம்**

**இயல் ஒன்று**

## 1.ஈ. சொலவடைகள் ( பொம்மலாட்டம் )

**– துணைப்பாடம்**

**மதிப்பீடு**

**பாடப்பகுதிப் பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.**

**ஆளுக்கு ஒரு வேலை :**

நம் கதாநாயகன் ஒரு பையன். அந்தப்பையன் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்லாமல் ஊர் சுற்றிச் சுற்றி வருவான். அவங்க அம்மா எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கவே இல்லை. "புண்ணுக்கு மருந்து போட முடியும் ; பிடிவாதத்துக்கு மருந்து போட முடியுமா ?" அவனோடப் பிடிவாதத்தை யாராலும் மாற்றவே முடியவில்லை. ஒரு நாள் அப்பா அந்த பையனைக் கூப்பிட்டு, இப்ப நீ சரியாகப் படிக்கவில்லை என்றால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. ஒழுங்காகப் பள்ளி சென்று படிக்கிற வேலையைப் பார் என்றார்.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



2. ஆள் கூடுனா பாம்பு சாகுமா ? என்பது போல ஒரு வேலை செய்ய ஆட்களின் எண்ணிக்கை முக்கியமல்ல. அதைச் செய்யும் திறமையே முக்கியம்.

3. அணை உடைஞ்சு போன வெள்ளம் அழுதாலும் வராது என்பது போல எனது நண்பன் அதிகம் கடன் பெற்று இன்று அழுது கொண்டிருக்கிறான்.

4. அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம் என்பது போல என் தோழன் தொலைக்காட்சி பார்ப்பது மட்டுமே சொர்க்கம் என்று இருந்தான்.

5. கைய ஊனித்தான் கரணம் போட முடியும் என்பது போல சொந்த முயற்சியால்தான் வெற்றி பெறவேண்டும்.

## கற்கண்டு

**இயல் ஒன்று**

## 1.உ. குற்றியலுகரம், குற்றியலிகரம்

– இலக்கணம்

### மதிப்பீடு

**I. கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

**ஆறு, எஃகு, கரும்பு, விறகு, உழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து**

| நெடில் தொடர் | ஆய்தத் தொடர் | உயிர்த் தொடர் | வன் தொடர் | மென் தொடர் | இடைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஆறு<br>காசு<br>ஏடு | எஃகு | விறகு | உழக்கு<br>எட்டு | பந்து<br>கரும்பு | கொய்து |

**II. பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.**

1. பசு, விடு, ஆறு, கரு — **விடை : கரு**
2. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து — **விடை : பஞ்சு**
3. ஆறு, மாசு, பாகு, அது — **விடை : அது**
4. அரசு, எய்து, மூழ்கு, மார்பு — **விடை : அரசு**
5. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு — **விடை : எஃகு**

**III. குறு வினா :**

**1. "குற்றியலுகரம்" என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.**

**விடை :**

குறுமை + இயல் + உகரம்
குறுமை – குறுகிய
இயல் – ஓசையுடைய
உகரம் – உ

தனிக்குறிலைச் சாராத வல்லின மெய்களின் மேல் (க், ச், ட், த், ப், ற்) ஏறிவரும் உகரம் (கு, சு, டு, து, பு, று) ஆறும் வல்லின உகரங்கள். இவை சொல்லின் இறுதியில் வரும்பொழுது ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கும். இவ்வாறு தனக்குரிய ஓசையில் இருந்து குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும்.

(எ.கா) காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு.

**2. குற்றியலிகரம் என்றால் என்ன ?**

**விடை :**

குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்
வரகு + யாது = வரகியாது



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே

இதன் பொருளாக மக்கள் கருதுவது நன்மை நடப்பதும், தீமை நடப்பதும் பெண்கள் கையில்தான் இருக்கிறது. ஆனால் இதன் உண்மையான பொருள் நன்மை நடப்பதும், தீமை அழிவதும் பெண்ணால்தான் நிகழ்கிறது என்று அர்த்தம் கொள்ள வேண்டும்.

கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை

இதனை மக்கள் கழுதை கற்பூர வாசனை அறியாது என்று கருதுவர். ஆனால் இதன் உண்மையான பொருள் கழு என்பது ஒருவகை கோரைப் புல். அதில் பாய் தைத்து படுத்துப்பார்த்தால் கற்பூர வாசனை தெரியும் என்பதே சரியான விளக்கம். இத்துடன் எனது பேச்சை நிறைவு செய்கிறேன்.

**III. சொல்லக்கேட்டு எழுதுக.**

1. நமது தாய்மொழி தமிழாகும்.
2. தமிழ்மொழி இனிமை, வளமை, சீர்மை மிக்கது.
3. தமிழுக்கு தலை கொடுத்தவன் குமண வள்ளல்.
4. தமிழ்மொழி பேச்சு மொழி, எழுத்துமொழி என்னும் இரண்டு கூறுகளை உடையது.
5. பேச்சு மொழியை உலக வழக்கு என்றும் கூறுவர்.

**IV. கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்பத் தொடரில் அழுத்தம் தரவேண்டிய சொற்களை எடுத்து எழுதுக.**

**கோதை கவிதையைப் படித்தாள்**

| வினா | அழுத்தம் தரவேண்டிய சொல் |
|---|---|
| கோதை எதைப் படித்தாள் ? | எதைப் படித்தாள் ? |
| கவிதையைப் படித்தது யார் ? | படித்தது யார் ? |
| கோதை கவிதையை என்ன செய்தாள் ? | என்ன செய்தாள் ? |

**V. அறிந்து பயன்படுத்துவோம்.**


திணை இரண்டு வகைப்படும்.

அவை 1. உயர்திணை, 2. அஃறிணை

ஆறு அறிவுடைய மனிதர்களை உயர்திணை என்பர்.

பறவைகள், விலங்கினங்கள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருள்களை அஃறிணை என்பர்.

**படத்திற்குப்பொருத்தமான திணையை எழுதுக.**

1. 
2. 
3. 

படம் 1 : உயர்திணை – ஆண்பால்

படம் 2 : அஃறிணை – ஒன்றன்பால்

படம் 3 : உயர்திணை – பெண்பால்

**VI. கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக**

**வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்**

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| முகிலன், கயல்விழி, தலைவி, ஆசிரியர், சுரதா | வயல், குதிரை, கடல், புத்தகம், மரம் |

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் மூன்று — 3. நாடு அதை நாடு

கவிதைப்பேழை

இயல் மூன்று — 3.அ. புலி தங்கிய குகை –செய்யுள்

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. " யாண்டு " என்னும் சொல்லின் பொருள் .........**

அ) எனது ஆ) எங்கு

இ) எவ்வளவு ஈ) எது **விடை : ஆ) எங்கு**

**2." யாண்டுளனோ ? " என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .**

அ) யாண்டு + உளனோ ? ஆ) யாண் + உளனோ ?

இ) யா + உளனோ ? ஈ) யாண்டு + உனோ ? **விடை : அ) யாண்டு + உளனோ ?**

**3. " கல் + அளை " என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்..................**

அ) கல்லளை ஆ) கல்அளை

இ) கலலளை ஈ) கல்லுளை **விடை : அ) கல்லளை**

**II. குறுவினா**

**தம் வயிற்றுக்குத் தாய் எதனை உவமையாகக் கூறுகிறார் ?**

**விடை:** தம் வயிற்றுக்குத் தாய் புலி தங்கிச் செல்லும் குகையை உவமையாகக் கூறுகிறார்.

**III. சிறுவினா**

**தம் மகன் குறித்துத் தாய் கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**விடை :** "சிறு அளவிலான எம் வீட்டின் தூணைப் பற்றிக் கொண்டு, ஏதும் அறியாதவள் போல நீ " உன் மகன் எங்கே ?" என என்னைக் கேட்கிறாய். அவன் எங்குள்ளான் என்று எனக்குத் தெரியவில்லை. ஆயினும் புலிதங்கிச் சென்ற குகை போல அவனைப் பெற்றெடுத்த வயிறு என்னிடம் உள்ளது. அவன் இங்கில்லை எனில் போர்க்களத்தில் இருக்கக்கூடும், போய்க் காண்பாயாக" என்று தாய் கூறினார்.

**IV. சிந்தனை வினா**

**தாய் தன் வயிற்றைப் புலி தங்கிச் சென்ற குகையோடு ஒப்பிடுவது ஏன் ?**

**தாயின் வயிறு = புலிதங்கிச் சென்ற குகை**

★ இப்பாடலில் வீரத்தாய் தன் மகனை வீரத்தில் சிறந்த புலியோடு ஒப்பிடுகிறாள்.

★ புலியானது தனது குகையிலிருந்து வெளியே செல்லும்போது இரையினை வேட்டையாடச் செல்லும்.

★ அதுபோல எனது மகன் என் வயிற்றிலிருந்து பிறந்ததே எதிரி நாட்டு படைகளை வேட்டையாடதான் என்ற பொருள் தரும்வகையில் இப்பாடலை அமைத்துள்ளார்.

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. நன்மை + தூண் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்**

அ) நல்லதூண் ஆ) நன்றுதூண்

இ) நற்றூண் ஈ) நற்றுதூண் **விடை : இ) நற்றூண்**

**2. புலிதங்கிய குகை பாடலை எழுதிய பெண்பாற் புலவர்**

அ) வெள்ளிவீதியார் ஆ) பெருங்கோப்பெண்டு

இ) ஆதிமந்தி ஈ) காவற்பெண்டு **விடை :ஈ) காவற்பெண்டு**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. சிற்றில் என்பதன் பொருள்......... ஆகும். **விடை : சிறு வீடு**
2. கல் அளை என்பதன் பொருள் ........ ஆகும். **விடை : கற்குகை**
3. புறநானூறு ........ நூல்களுள் ஒன்று. **விடை : எட்டுத்தொகை**
4. காவற்பெண்டு பாடிய பாடலின் துறை ........ ஆகும். **விடை : ஏறாண் முல்லை**

**III. சிறுவினா.**

**1. காவற்பெண்டு குறிப்பு தருக.**

**விடை :**

★ காவற்பெண்டு சங்ககாலப் பெண்பாற்புலவர்களுள் ஒருவர்.

★ இவர் சோழ மன்னன் போரவைக் கோம்பெரு நற்கிள்ளியின் செவிலித்தாயாக விளங்கியவர்.

★ கல்வியில் தேர்ச்சியும் கவிபாடும் ஆற்றலும் மிக்கவர்.

★ சங்க கால மக்களின் வீரத்தைக் கரும்பொருளாகக் கொண்டு இவர் பாடிய ஒரே ஒரு பாடல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

**2. புறநானூறு நூற்குறிப்பு தருக**

**விடை : புறநானூறு நூற்குறிப்பு :–**

★ புறநானூறு என்னும் தொகைநூல் நானூறு பாடல்களைக் கொண்ட புறத்திணை சார்ந்த ஒரு சங்கத் தமிழ் நூலாகும்.

★ இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.

★ புறம், புறப்பாட்டு என்றும் வழங்கப்படும்.

★ அடிவரையறை 4 அடி முதல் 40 அடி வரை.

★ அக்காலத் தமிழ் மக்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம், கல்வி, நாகரீகம், கலை வளர்ச்சி, வீரம், கொடை, ஆடை, அணிகலன், பழக்க வழக்கங்கள், வாணிபம் போன்ற பல செய்திகளைப் புறநானூறு வழி அறியலாம்.


★ இதனை ஜி.யு.போப் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

**கற்பவை கற்றபின்**

**1. சங்க காலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை அறிந்து எழுதுக.**

அள்ளூர் நன் முல்லையார், ஆதிமந்தி, ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், காவற்பெண்டு, பெருங்கோப்பெண்டு, பொன்முடியார், குறமகள் குறியெயினி, முடத்தாமக் கண்ணியார், வெண்ணிக் குயத்தியார், நக்கண்ணையார், வெள்ளிவீதியார், நல்வெள்ளியார்.

**2. பண்டைக்காலப் போர்க்கருவிகள் சிலவற்றைப் படம் வரைந்து அவற்றின் பெயர்களை எழுதுக.**




வாள்



ஈட்டி



வேல்



வில் அம்பு

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## கற்பவை கற்றபின்

**நாட்டுக்கு உழைத்த சிறந்த பிற தலைவர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதுக.**

**காந்தியடிகள் :** நாட்டு விடுதலைக்காக அறவழியில் போராடியவர்.

**நேதாஜி :** இந்திய தேசிய இராணுவத்தை அமைத்து ஆங்கிலேயரை எதிர்த்தவர்.

**வ.உ.சிதம்பரனார் :** நம் நாட்டுக்காக சுதேசக் கப்பலை வாங்கியவர். மக்களுக்காக சிறையில் செக்கிழுத்தவர்.

---

**விரிவானம்**

**இயல் மூன்று** | **3.ஈ. கப்பலோட்டிய தமிழர்** – துணைப்பாடம்

## மதிப்பீடு

**வ.உ.சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.**

இந்தியக் கடலாட்சி எமதே எனக் கருதி இறுமாந்திருந்த ஆங்கிலேயர் பொறி கலங்கி நெறிமயங்கச் செய்தவர் நமது கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். தூத்துக்குடி துறைமுகத்தில் அவரின் உரைபின்வருமாறு.

அன்று கொற்கை துறைமுகத்தில் பாண்டியரின் மீன் கொடி பறந்தது. முத்துவளம் கொழித்தது. அன்று நம்மவர்கள் வாணிகம் செய்தனர்.

இன்று ஆங்கிலேயரின் கொடி உள்ளது. இன்றோ முத்துவளம் கொழிக்கவில்லை. இன்று ஆங்கிலேயர் வாணிகம் செய்கின்றனர். நம்மவர்கள் கூலி வேலை செய்கின்றனர்.

அதற்காக துறைமுகத்தில் சுதேசக் கப்பல் கம்பெனி ஒன்று உருவாயிற்று அதன் தலைவராக பாண்டித்துரையார் பொறுப்பேற்றார் அதன் செயலாளனாக வ.உ.சிதம்பரனார் பொறுப்பேற்றார். சுதேசிக் கப்பல் முதல்முதலாக கொழும்பு துறைமுகம் சென்றது. சுதேசிக் கப்பல் வாணிகம் வளர்ந்தது.

இதைப்பொறுக்காத வெள்ளையர்கள் வ.உ.சிதம்பரனாரை சுதேசிக் கம்பெனியில் இருந்து விலக நூறாயிரம் கையடக்கம் தருவதாகக் கூறினர். அதனை வாங்க அவர் மறுத்ததால் அவரை அடக்குமுறையால் அடக்க அரசாங்கத்தின் உதவியை நாடினர்.

சிதம்பரனாருக்கு இரட்டைத் தீவாந்திர தண்டனை கிடைத்தது. பிறகு அப்பீல் கோர்ட்டிலே சிறைத் தண்டனையாக மாறிற்று. ஆறாண்டு கோவைச் சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலும் கொடும்பணி கொடுக்கப்பட்டது.

சிறையில் ஒருநாள் ஜெயிலர் சிதம்பரனாருக்கு புத்திமதி கூறினான். அதை கேட்ட சிதம்பரனார் கோபப்பட்டு அடே மடையா ! நீயா எனக்கு புத்திமதி சொல்பவன் நான் உன் அப்பனுக்கும் புத்தி சொல்வேன் எனக் கூறினார்.

சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது செந்தமிழ் என்றார். சிறையில் தொல்காப்பியம் இன்னிலை போன்ற நூல்களை படித்து மகிழ்ந்தார்.

ஆலன் எழுதிய 'மனம் போல் வாழ்வு' என்ற ஆங்கில நூலை மொழிபெயர்த்தார் மெய்யறிவு, மெய்யறம் போன்ற நூல்களை இயற்றினார்.

சிறைக்காலம் முடிந்து மீண்டும் துறைமுகம் வந்தார். துறைமுகத்தில் சுதேசிக் கப்பல் இல்லாதது கண்டு மனம் வருத்தமுற்றார். எனினும் இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் சுதந்திரம் வந்தே தீரும். வீரசுதந்திர வெள்ளம் புறப்பட்டு விட்டது. அதைத் தடுத்து நிறுத்த யாராலும் முடியாது என்றார்.

---



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**VI. கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**
**நான் விரும்பும் தலைவர்.**
**குறிப்புச் சட்டகம் : முன்னுரை, இளமையும் கல்வியும், பதவியாசை இல்லாதவர், நேர்மை தவறாதவர்,கல்வி வள்ளல், நாட்டு நலப்பணி, முடிவுரை**

**காமராசர்**

**முன்னுரை :**

தன்னலம் சிறிதும் இன்றிப் பொதுநலம் பெரிதும் எண்ணி வாழ்நாள் முழுவதும் உழைத்த பெருந்தலைவர் காமராசர் காட்சிக்கு எளியவர். கருத்துக்கு இனியவர். காமராசர் எண்ணற்ற தலைவர்களுள் நான் விரும்பும் தலைவர் இவரே.

**இளமையும் கல்வியும் :**

விருதுநகரில் 15.07.1903 அன்று குமாரசாமிக்கும் சிவகாமியம்மாளுக்கும் அருந்தவப் புதல்வராய்ப் பிறந்தவர். இவரது இயற்பெயர் காமாட்சி. இவர் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் போது வறுமை காரணமாக பள்ளி செல்வதை நிறுத்தி கடைக்கு வேலை பார்க்கச் சென்றார் பின்னர் அரசியலில் நுழைந்து அண்ணல் காந்தி வழியில் நாட்டு விடுதலைக்காகப் போராடினார்.

**பதவியாசை இல்லாதவர் :**

1940 – ல் தமிழ்நாடு காங்கிரசின் தலைவரானார் காமராசர். 1941 ல் இவர் வேலூர்ச் சிறையில் இருந்தபோது விருதுநகர் நகர்மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்.
விடுதலையாகி வந்ததும் நாட்டு விடுதலை குறித்த வேலைகள் பல தமக்கு இருப்பதால் அந்தப் பதவி வேண்டாமென்று கூறிப் பதவி விலகினார்.

**நேர்மை தவறாதவர் :**

1966 ல் அனைத்திந்திய காங்கிரசின் தலைவரானார் காமராசர். அப்பொழுது தமிழ்நாட்டிலும் காங்கிரசின் ஆட்சி. அப்போது கொலை வழக்கில் சிக்கிய உறவினர் ஒருவர் இவருதவியை நாடி வந்தனர். இவரோ மறுத்து விட்டார். அக்குற்றவாளிக்கு ஈராண்டுச் சிறைதண்டனை கிடைத்தது. காமராசர் இதில் தலையிடாதது கண்டு அதிகாரிகளும் பிறரும் வியந்தனர்.

**கல்வி வள்ளல் :**

இராசாசியின் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்தார் காமராசர். இராசாசி காலத்தில் மூடப்பட்ட பள்ளிகளைத் திறந்தார். புதிய பள்ளிகளையும் ஏற்படுத்தினார். பள்ளிக் கல்வியை இலவசமாக்கினார். ஏழை மாணவர்க்குப் பகலுணவு வழங்கினார். ஏழை எளிய கிராமப்புற மாணவர்க்கு இலவசமாக கல்வி அளித்த " கல்விக் கண் திறந்த காமராசர் " என்ற பேறு பெற்றார்.

**நாட்டு நலப்பணி :**

உழவும் தொழிலும் சிறக்க உழைத்த காமராசர் மணிமுத்தாறு, கீழ்பவானி, வைகை, சாத்தனூர் முதலிய பெரிய நீர்பாசனத் திட்டங்களைச் செயற்படுத்தினார். சிற்றூர்களுக்கு மின்சாரம் வழங்கினார். நிலக்கரி, சிமெண்டு, இரும்புத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தினார்.

**முடிவுரை :**

எளிய குடும்பத்தில் பிறந்து, படிக்காத மேதையாய்ச் சிறந்து நாட்டு நலனையே நாளும் நினைத்து உண்மையாய் உழைத்துப் புகழையன்றி எதையும் சேர்க்காமல் மறைந்த காமராசரைப் போற்றுவோம் நற்பணி ஆற்றுவோம்.

---

**இயல் மூன்று**

## 3.எ. மொழியோடு விளையாடு
**– மொழிப்பயிற்சி**

**I. இடைச்சொல் " கு " சேர்த்துத் தொடரை எழுதுக.**

(எ.கா.)வீடு சென்றான்–வீடு+கு + சென்றான் – வீட்டுக்குச் சென்றான்.

1. மாடு புல் கொடுத்தார்

விடை : மாடு+கு+புல் கொடுத்தார் = மாட்டுக்கு = மாட்டுக்குப்புல் கொடுத்தார்.

2. பாட்டு பொருள் எழுது

விடை : பாட்டு+கு+பொருள் எழுது =பாட்டுக்குப் = பாட்டுக்குப் பொருள் எழுது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



3. செடி பாய்ந்த நீர்
விடை : செடி + கு + பாய்ந்த நீர் = செடிக்குப் பாய்ந்த நீர்.
4. முல்லை தேர் தந்தான் பாரி
விடை : முல்லை+கு+தேர்தந்தார் பாரி = முல்லைக்குத் தேர் தந்தான் பாரி.
5. சுவர் சாந்து பூசினாள்
விடை : சுவர்+கு + சாந்து பூசினாள் = சுவர்க்குச் சாந்து பூசினாள்.

## II. இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

| | |
|---|---|
| **கண்** | **அழகு** |
| **மண்** | |
| **விண்** | |
| **பண்** | **உண்டு** |

| | |
|---|---|
| கண்ணழகு | கண்ணுண்டு |
| மண்ணழகு | மண்ணுண்டு |
| விண்ணழகு | விண்ணுண்டு |
| பண்ணழகு | பண்ணுண்டு |

**அகம் என முடியும் சொற்களை எழுதுக.**
**(எ.கா.) நூலகம்**
1. அலுவலகம் 2. உணவகம் 3. காப்பகம் 4. பயிலகம் 5. மருந்தகம்

## III. கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.

**(எ.கா.) திருக்குறள் ௩ பால்களைக் கொண்டது.**
1. எனது வயது கஉ .
2. நான் படிக்கும் வகுப்பு எ.
3. தமிழ் இலக்கணம் ரு வகைப்படும்.
4. திருக்குறளில் க௩ ௩ அதிகாரங்கள் உள்ளன.
5. இந்தியா க கூ சு எ ஆம் ஆண்டு விடுதலை பெற்றது.

## IV. குறிப்புகளைக் கொண்டு தலைவர்களின் பெயர்களைக் கட்டங்களிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தி | ரு | ப் | பூ | ர் | கு | ம | ர | ன் |
| ரு | தா | கா | ன் | க | க் | க | நா | லை |
| வ | ந் | ம | யா | ர் | டு | ட் | க | ம |
| ள் | ஜி | ரா | ஜா | யா | ர் | ட | ம் | ன |
| ளி | ஜா | ச | ர | தி | யா | பொ | மை | ன் |
| ய | ரா | ர் | னா | ர | ப | ம் | த | சி |
| ம் | இ | டி | ண் | பா | ர | ம | மி | ற |
| மை | வா | ஞ் | சி | நா | த | ன | ழி | ப் |
| ர் | யா | சி | ச் | நா | லு | வே | ல் | பு |

**விடைகள் :**
1. மூதறிஞர் **ராஜாஜி**
2. வீரமங்கை **வேலுநாச்சியார்**
3. பாஞ்சாலங்குறிச்சி வீரன் **கட்டபொம்மன்**
4. வெள்ளையரை எதிர்த்த தீரன் **சின்னமலை**
5. கொடிகாத்தவர் **திருப்பூர்குமரன்**
6. எளிமையின் இலக்கணம் **கக்கன்**
7. தில்லையாடியின் பெருமை **வள்ளியம்மை**
8. கப்பலோட்டிய தமிழர் **சிதம்பரனார்**
9. பாட்டுக்கொரு புலவன் **பாரதி**
10. விருதுப்பட்டி வீரர் **காமராசர்**
11. கள்ளுக்கடை மறியல் பெண்மணி **நாகம்மை**
12. மணியாட்சியின் தியாகி **வாஞ்சிநாதன்**

## V. நிற்க அதற்குத் தக...

**என் பொறுப்புகள் ....**
1. விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறுகளை அறிந்து போற்றுவேன்.
2. தலைவர்களின் அரிய பண்புகளை உணர்ந்து பின்பற்றுவேன்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# செலக்சன்

## ⑦ ஏழாம் வகுப்பு தமிழ்

## இரண்டாம் பருவம்

**மனப்பாடப்பகுதி**

**இயல். 1**

**கலங்கரை விளக்கம்**

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை.......

**– கடியலூர் உருத்திரங் கண்ணனார்**

**இயல். 2**

**அழியாச் செல்வம்**

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற்று அல்ல பிற.

**– சமண முனிவர்**

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் ஒன்று

## 1. அறிவியல் ஆக்கம்

கவிதைப்பேழை

இயல் ஒன்று

## 1.அ. கலங்கரை விளக்கம் – செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வேயாமாடம் எனப்படுவது ..........**

அ) வைக்கோலால் வேயப்படுவது
ஆ) சாந்தினால் பூசப்படுவது
இ) ஓலையால் வேயப்படுவது
ஈ) துணியால் மூடப்படுவது **விடை : ஆ) சாந்தினால் பூசப்படுவது**

**2. உரவுநீர் <u>அழுவம்</u> – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ............**

அ) காற்று ஆ) வானம் இ) கடல் ஈ) மலை **விடை : இ) கடல்**

**3. கடலில் துறைமுகம் அறியாமல் கலங்குவன ............**

அ) மீன்கள் ஆ) மரக்கலங்கள்
இ) தூண்கள் ஈ) மாடங்கள் **விடை : ஆ) மரக்கலங்கள்**

**4. "தூண்" என்னும் பொருள் தரும் சொல் ............**

அ) ஞெகிழி ஆ) சென்னி இ) ஏணி ஈ) மதலை **விடை : ஈ) மதலை**

---

**II. குறுவினா.**

**1. மரக்கலங்களைத் துறைமுகம் நோக்கி அழைப்பது எது ?**

**விடை :** மரக்கலங்களைத் துறைமுகம் நோக்கி அழைப்பது கலங்கரை விளக்கம்.

**2. கலங்கரை விளக்கில் எந்நேரத்தில் விளக்கு ஏற்றப்படும் ?**

**விடை :** கலங்கரை விளக்கில் இரவு நேரத்தில் விளக்கு ஏற்றப்படும்.

---

**III. சிறுவினா**

**கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறும் கருத்துகளை எழுதுக.**

**விடை : கலங்கரை விளக்கம் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை கூறுவன :**

★ கலங்கரை விளக்கமானது வானம் கீழே விழுந்துவிடாமல் தாங்கிப்பிடிக்கும் தூண் போலத் தோற்றமளிக்கிறது.

★ ஏணி கொண்டு ஏறமுடியாத அளவிற்கு உயரத்தைக் கொண்டிருக்கிறது.

★ திண்மையான கலவைச் சாந்து பூசப்பட்ட ஆகாயத்தைத் தொடும் மாடத்தை உடையது.

★ அம்மாட உச்சியில் இரவில் ஏற்றப்பட்ட எரியும் விளக்கு, பெருங்கடற் பரப்பில் திசை தெரியாமல் தவிக்கும் மரக்கலங்களைத் தன் துறை நோக்கி அழைக்கிறது.

---

**IV. சிந்தனை வினா.**

**கலங்கரை விளக்கம் கப்பல் ஓட்டிகளைத் தவிர வேறு யாருக்கெல்லாம் பயன்படும் என நீங்கள் கருதுகிறீர்கள் ?**

**விடை :**

★ நடுக்கடலில் கட்டுமரங்களில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும்போது கடல் சீற்றத்தால் திசைமாறிச் செல்ல நேரிடும்.

★ அவ்வேளையில் அருகிலுள்ள கலங்கரை விளக்கின் ஒளி மூலம் கரையை அடைய இயலும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




**கற்பவை கற்றபின்**


**1. கடற்கரைக்குச் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு மகிழ்க.**

★ கண்ணுக்கடங்காத கடல் ஒரு காட்சி
★ எண்ணுக்கடங்காத மணல் ஒரு காட்சி
★ அள்ள முடியாத அலை ஒரு காட்சி

**2. கலங்கரை விளக்கம் – மாதிரி ஒன்று செய்து வருக.**



**3. கடலும் கலங்கரை விளக்கமும் – ஓவியம் வரைந்து வண்ணம் தீட்டுக.**



**இயல் ஒன்று**

## கவிதைப்பேழை

## 1.ஆ. கவின்மிகு கப்பல் – செய்யுள்

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. இயற்கை <u>வங்கூழ்</u> ஆட்ட – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் ..........**
அ) நிலம் ஆ) நீர் இ) காற்று ஈ) நெருப்பு **விடை : இ) காற்று**

**2. மக்கள் ............. ஏறி வெளிநாடுகளுக்குச் சென்றனர்**
அ) கடலில் ஆ) காற்றில் இ) கழனியில் ஈ) வங்கத்தில் **விடை : ஈ) வங்கத்தில்**

**3. புலால் நாற்றம் உடையதாக அகநானூறு கூறுவது .............**
அ) காற்று ஆ) நாவாய் இ) கடல் ஈ) மணல் **விடை : இ) கடல்**

**4. "பெருங்கடல்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .............**
அ) பெரு + கடல் ஆ) பெருமை + கடல்
இ) பெரிய + கடல் ஈ) பெருங் + கடல் **விடை : ஆ) பெருமை + கடல்**

**5. "இன்று + ஆகி" என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .............**
அ) இன்றுஆகி ஆ) இன்றிஆகி
இ) இன்றாகி ஈ) இன்றாஆகி **விடை : இ) இன்றாகி**

**6. எதுகை இடம்பெறாத இணை .............**
அ) இரவு – இயற்கை ஆ) வங்கம் – சங்கம்
இ) உலகு – புலவு ஈ) அசைவு – இசைவு **விடை : அ) இரவு – இயற்கை**

**II. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. வங்கம் | – | பகல் |
| 2. நீகான் | – | கப்பல் |
| 3. எல் | – | கலங்கரை விளக்கம் |
| 4. மாட ஒள்ளெரி | – | நாவாய் ஓட்டுபவன் |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1. வங்கம்** | – | **கப்பல்** |
| **2. நீகான்** | – | **நாவாய் ஓட்டுபவன்** |
| **3. எல்** | – | **பகல்** |
| **4. மாட ஒள்ளெரி** | – | **கலங்கரை விளக்கம்** |

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**கற்பவை கற்றபின்**

**1. பலவகையான கப்பல்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.**



**2. தரைவழிப் பயணம், கடல்வழிப் பயணம், வான்வழிப் பயணம் ஆகியவை குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**மாணவன் 1:** என்ன நண்பா இரண்டு நாட்களாக பள்ளிக்கு வரவில்லை.....
**மாணவன் 3:** உடல் நலமில்லையா .....
**மாணவன் 2:** இல்லை!... இல்லை!... குடும்பத்துடன் சுற்றுலா சென்றிருந்தோம்..
**மாணவன் 1:** சுற்றுலாவா.....
**மாணவன் 2:** ஆமாம்.. கன்னியாகுமரி சென்றிருந்தோம்..
**மாணவன் 3:** பயணம் பற்றி விளக்கமாகச் சொல் நண்பா..
**மாணவன் 2:** தரைவழிப் பயணமும், கடல்வழிப் பயணமும் ஒருங்கே கிடைத்தது நண்பா..
**மாணவன் 1:** அப்படியா ! கடல்வழிப்பயணமா !.....
**மாணவன்2:** ஆமாம், முதல் முதலாக கடற்கரையிலிருந்து கடல் வழியாக சிறிய கப்பலில் விவேகானந்தர் பாறையைக் காணச் சென்றது எனக்குப் புது அனுபவமாக இருந்தது நண்பா...
**மாணவன் 1:** நீ கொடுத்து வைத்தவண்டா....
**மாணவன்3 :** அடுத்த மாதம் நானும் என் குடும்பத்தாரும் விமானத்தில் உறவினரின் இல்ல நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருக்கிறோம் நண்பா...
**மாணவன் 1:** அப்படியா... வாழ்த்துக்கள் நண்பா...
**மாணவன் 2 :** உன்னுடைய விமானப் பயணத்தைப் பற்றிக் கட்டாயம் எங்களிடம் பகிர்ந்துகொள்வாய் என நம்புகிறேன்...

## விரிவானம்

**இயல் ஒன்று** — **1.ஈ. ஆழ்கடலின் அடியில்** – துணைப்பாடம்

**மதிப்பீடு**

**ஆழ்கடலின் அடியில் கதையைச் சுருக்கி எழுதுக.**

கடல் பல்வேறு விந்தைகளைத் தன்னுள் கொண்டது. கடலுக்கடியில் பல நகரங்களும் கப்பல்களும் மூழ்கிக் கிடக்கின்றன. ஒரு கற்பனையான நீர்மூழ்கிக் கப்பலில் சென்று அவற்றையெல்லாம் காண்போம்.

விலங்கியல் பேராசிரியர் : 1886 ஆம் ஆண்டு கப்பல்களை உலோகத்தால் ஆன உடலைக் கொண்ட ஒரு விந்தையான விலங்கு தாக்குவதாக செய்தியறிந்த பியரி அமெரிக்காவின் நியூயார்க் நகரிலிருந்து ஃபராகட் என்ற தலைவரின் துணையோடு கடற் பயணம் மேற்கொண்டார். அவருடன் நெட் மற்றும் கான்சீலும் உடன் சென்றார்கள்.

மூன்று மாதங்கள் அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் இடையே உள்ளபெருங்கடல் பரப்பில் ஓர் இடம் விடாமல் தேடி இறுதியாக அது விலங்கல்ல நீர் மூழ்கிக் கப்பல் என்பதை நெட் என்பவர் மூலம் கண்டறிந்தனர்.

நெமோ என்பவரின் நீர்மூழ்கிக் கப்பலே நாட்டிலஸ் ஆகும். நெமோ, பியரி, நெட், கன்சீல் ஆகிய மூவரையும் சிறைபிடித்து தனது நீர் மூழ்கிக் கப்பலில் அடைத்து வைத்தார். கப்பலில் மிகச் சிறந்த நூலகம் ஒன்றும், மிகப்பெரிய அருங்காட்சியகம் ஒன்றும் இருந்தன. கப்பல் எந்தக் கடலில் எந்தப்

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பகுதியில் இருக்கிறது, கடலுக்கு அடியில் எவ்வளவு ஆழத்தில் இருக்கிறது ஆகியவற்றைத் துல்லியமாகக் காட்டும் பெரிய திரை ஒன்றும் அங்கே இருந்தது.

மூவரும் நாட்டிலஸ் நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து தப்பிக்க முயற்சி செய்து தோல்வியுற்றனர். பின் நெமோவிடம் நீர்மூழ்கிக் கப்பல் எவ்வாறு செயல்படுகிறது என்பதனைக் கேட்டு தெளிவுற்றனர். நீர்மூழ்கிக் கப்பல் திடீரென்று மணல் திட்டில் சிக்கிக் கொண்டது.

நாட்டிலஸ் செயல்பட சில நாட்கள் ஆகும் என்பதால், மேல் தளத்திற்கு வந்தபோது ஒரு தீவைக் கண்டு அத்தீவிற்குச் சென்றனர். அங்கு வாழும் மனிதர்கள், மனிதர்களைக் கொன்று தின்னும் பழக்கமுடையவர்கள் என்பதை அறிந்து அவர்களிடமிருந்து தப்பிக்கப் பெரு முயற்சியை மேற்கொண்டனர்.

நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் தொடர்ந்தது. ஓர் இந்தியர் கடலுக்கடியில் தன்னந்தனியாக முத்துக்குளிப்பதைக் கண்டு வியப்படைந்தனர். அவரைச் சுறா மீன் ஒன்று தாக்க வருவதைக் கண்டு நெமோ தன் கையில் இருந்த வாளினால் சுறா மீனைக் கிழித்து இந்தியரைக் காப்பாற்றினார்.

கடலுக்குள் தீப்பிழம்பைக் கக்கிக் கொண்டிருக்கும் எரிமலையைக் கண்டு வியந்தனர். பூகம்பத்தால் கடலுக்குள் மூழ்கிப்போன "அட்லாண்டிஸ்" என்னும் நகரத்தின் இடிபாடுகளையும் கண்டனர். பூமியின் தென்துருவத்திற்குச் சென்று பென்குவின், கடல்சிங்கம் போன்ற அரிய வகைப் பறவைகளையும், விலங்குகளையும் கண்டனர்.

ஒரு நாள் நாட்டிலஸ் ஒருபெரும் கடல் சுழலுக்குள் சிக்கிக்கொண்டது. மூவரும் கடலுக்குள் தூக்கி வீசப்பட்டனர். நார்வே நாட்டு மீனவரால் காப்பாற்றப்பட்டனர்.

நாட்டிலஸ்க்கு என்ன நேர்ந்தது என்பது பற்றியோ நெமோ என்ன ஆனார் என்பது பற்றியோ யாருக்கும் எந்தச் செய்தியும் கிடைக்கவில்லை.

## கற்பவை கற்றபின்

**1. ஆழ்கடல் காட்சியொன்றைக் கற்பனையாகப் படம் வரைந்து வண்ணம் தீட்டுக.**



**2. நீர்மூழ்கிக்கப்பல் இயங்கும் முறைபற்றிய செய்திகளைத் திரட்டித் தொகுத்து எழுதுக.**

★ நீர்மூழ்கிக் கப்பலில் 2 என்ஜின்கள் உள்ளன. நீர்மட்டத்திற்கு மேலே ஒரு என்ஜின் உள்ளது. இது கப்பல் செல்லும்போது நீராவியால் இயக்கப்படும். இன்னொன்று கப்பல் நீரில் மூழ்கிச் செல்லும்போது மின்சாரத்தால் இயக்கப்படும்.

★ கப்பல் நீரினுள் மூழ்கும் முன்பு அனைத்துக் கதவுகளும் அடைக்கப்பட்டு கோபுர வாசலும் மூடப்படும். பின்னர் நீர்த் தொட்டி திறக்கப்பட்டு, கடல் நீர் தொட்டிக்குள் வந்து நிறைந்தவுடன் கப்பலின் எடை மிகுந்து கீழே செல்லும். இதற்குச் சிறகுகளும் உறுதுணையாகச் செயல்படும். கப்பல் கடலுக்குள் மூழ்கும்போது முன்புறம் தாழ்ந்தும், பின்புறம் உயர்ந்தும் மீன் நீந்திச் செல்வது போல் இருக்கும்.

★ கப்பல் மேலே வரும்போது காற்றுக் குழாய்கள் திறக்கப்படும். காற்றானது நீர்த்தொட்டிக்குள் சென்று அங்கிருக்கும் நீரை வெளியேற்றும். இதனால் கப்பலின் எடை குறைந்து மேலே நீர்மட்டத்திற்கு வரும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் ஒன்று

## 1.எ. மொழியோடு விளையாடு

– மொழிப்பயிற்சி

**I. குறுக்கெழுத்துப் புதிர்.**

**பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை அறிவோம்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 த | ந் | தை | | 2 அ | றி | 3 வி | ய | ல் |
| லை | | 4 தே | ர் | வு | | ய | | த |
| வ | ளை | | | | | ப் | | 5 மு |
| ர் | ட | 6 இ | | 7 தொ | | பு | | |
| | ட் | | ல் | ட | 8 உ | | | சி |
| | 9 க | 10 கு | றி | க் | கோ | ள் | | ச் |
| | | | | க | | 11 நா | | ழ் |
| நூ | | | | ம் | | | | கி |
| 12 று | லா | ர | 13 வ | | லி | 14 ஒ | | 15 ம |

**இடமிருந்து வலம் :**
1. அச்சன் – தந்தை
2. விஞ்ஞானம் – அறிவியல்
4. பரீட்சை – தேர்வு
10. லட்சியம் – குறிக்கோள்

**மேலிருந்து கீழ் :**
1. அதிபர் – தலைவர்
3. ஆச்சரியம் – வியப்பு
7. ஆரம்பம் – தொடக்கம்
12. சதம் – நூறு

**வலமிருந்து இடம் :**
6. அபாயம் – இடர்
8. தேகம் – உடல்
13. சரித்திரம் – வரலாறு
14. சத்தம் – ஒலி

**கீழிருந்து மேல் :**
5. ஆதி – முதல்
9. உத்தரவு – கட்டளை
11. தினம் – நாள்
15. சந்தோசம் – மகிழ்ச்சி

**II. குறிப்புகளைக் கொண்டு "மா" என்னும் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கண்டறிந்து கட்டங்களை நிரப்புக.**

1. முக்கனிகளுள் ஒன்று — | மா |
2. கதிரவன்மறையும் நேரம் — | மா | லை |
3. பெருந்திரளான மக்கள் கூடும் நிகழ்வு — | மா | நா | டு |
4. எழுத்துக்களை ஒலிக்க ஆகும் கால அளவு — | மா | த் | தி | ரை |
5. அளவில் பெரிய நகரம் — | மா | ந | க | ர | ம் |

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## இயல் இரண்டு — 2.ஒதுவது ஒழியேல்

### கவிதைப் பேழை

## இயல் இரண்டு — 2.அ. இன்பத்தமிழ்க் கல்வி – செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பெண்களுக்கு நிகராகப் பாரதிதாசன் கூறுவது.................**

அ) மயில் ஆ) குயில் இ) கிளி ஈ) அன்னம் விடை : அ) மயில்

**2. பின்வருவனவற்றுள் 'மலை'யைக் குறிக்கும் சொல்**

அ) வெற்பு ஆ) காடு இ) கழனி ஈ)புவி விடை : அ) வெற்பு

**3. 'ஏடெடுத்தேன்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது..............**

அ) ஏடெ டு +தேன் ஆ) ஏட் டு + எடுத்தேன்
இ) ஏடு + எடுத்தேன் ஈ) ஏ+டெடுத்தேன் விடை : இ) ஏடு + எடுத்தேன்

**4. 'துயின்றிருந்தார்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.................**

அ) துயின்று + இருந்தார் ஆ) துயில் + இருந்தார்
இ) துயின்றி + இருந்தார் ஈ) துயின் + இருந்தார் விடை : அ) துயின்று + இருந்தார்

**5. என்று + உரைக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்..............**

அ) என்று உரைக்கும் ஆ) என்றிரைக்கும்
இ) என்றரைக்கும் ஈ) என்றுரைக்கும் விடை : ஈ) என்றுரைக்கும்

**II. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. கழனி | – | கதிரவன் |
| 2. நிகர் | – | மேகம் |
| 3. பரிதி | – | சமம் |
| 4. முகில் | – | வயல் |

**விடைகள்**

| | | |
|---|---|---|
| 1. கழனி | – | வயல் |
| 2. நிகர் | – | சமம் |
| 3. பரிதி | – | கதிரவன் |
| 4. முகில் | – | மேகம் |

**III. குறுவினா**

**1. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை ?**

**விடை :** தடைகளற்ற வானும், பாய்கின்ற நீரோடையும், பூத்த தாமரை மலர்களும், பசுமை காடும் , வளம் கொழிக்கும் வயல்களும் , கருநிறங்கொண்ட மழை மேகங்களும், பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் ஆகும்.

**2. தமிழ் மொழிக்கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் எவையெனப் பாரதிதாசன் குறிப்பிடுகிறார் ?**

**விடை :** தமிழ்மொழிக் கல்வி பயில்வதால் கற்றவரின் வாழ்வில் துன்பம் நீங்கி இன்பம் பெருகும். நெஞ்சில் தூய்மை உண்டாகும். மனதில் வீரம் ஏற்படும் என்று பாரதிதாசன் குறிப்பிடுகிறார்.

www. Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



கற்கண்டு

இயல் இரண்டு

## 2. உ. ஓரெழுத்து ஒரு மொழி, பகுபதம், பகாப்பதம் – இலக்கணம்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை .........**
அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46 **விடை : ஆ) 42**

**2. ' எழுதினான் என்பது ...........**
அ) பெயர்ப் பகுபதம் ஆ) வினைப் பகுபதம்
இ) பெயர்ப் பகாப்பதம் ஈ) வினைப் பகாப்பதம் **விடை : ஆ) வினைப் பகுபதம்**

**3. பெயர்ப்பகுபதம்.............வகைப்படும்**
அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு **விடை : இ) ஆறு**

**4. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு.......................**
அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) சந்தி **விடை : இ) இடைநிலை**

**II. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. பெயர்ப் பகுபதம் | – | வாழ்ந்தான் |
| 2. வினைப் பகுபதம் | – | மன் |
| 3. இடைப் பகாப்பதம் | – | நனி |
| 4. உரிப் பகாப்பதம் | – | பெரியார் |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1. பெயர்ப் பகுபதம்** | – | **பெரியார்** |
| **2. வினைப் பகுபதம்** | – | **வாழ்ந்தான்** |
| **3. இடைப் பகாப்பதம்** | – | **மன்** |
| **4. உரிப் பகாப்பதம்** | – | **நனி** |

**III. சரியான பகுபத உறுப்பை எழுதுக.**

**போவாள் – போ + வ் + ஆள்**
போ : பகுதி
வ் : எதிர்கால இடைநிலை
ஆள் : பெண் பால் வினை முற்று விகுதி

**நடக்கின்றான் – நட+க்+கின்று + ஆன்**
நட : பகுதி
க் :சந்தி
கின்று :நிகழ்கால இடைநிலை
ஆன் :ஆண் பால் வினை முற்று விகுதி

**IV. பின்வரும் சொற்களைப் பிரித்துப் பகுபத உறுப்புகளை எழுதுக.**
**1. பார்த்தான் 2. பாடுவார்**

**1. பார்த்தான் = பார் + த் + த் + ஆன்**
பார் = பகுதி
த் = சந்தி
த் = இறந்த கால இடை நிலை
ஆன் = ஆண் பால் வினைமுற்று விகுதி

**2. பாடுவார் = பாடு + வ் + ஆர்**
பாடு=பகுதி
வ்=எதிர் கால இடைநிலை
ஆர்=பலர் பால் வினை முற்று விகுதி

**V. குறுவினா**

**1. ஓரெழுத்து ஒருமொழி என்றால் என்ன ?**
**விடை :** ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர். (எ.கா) பூ, கை, தா

**2. பதத்தின் இரு வகைகள் யாவை ?**
**விடை : பதத்தின் இரு வகைகள் :**
1. பகுபதம் 2. பகாப்பதம்

**3. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?**
**விடை :** பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும் அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் ஆகியவையாகும்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com




இயல் இரண்டு

## 2.எ. மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I. கீழே உள்ள குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டத்தில் எழுத்துகளை நிரப்புக.**

1. காலையில் பள்ளி மணி...ஒலிக்கும்...
2. திரைப்படங்களில் விலங்குகள்...நடிக்கும்... காட்சி குழந்தைகளுக்குப் பிடிக்கும்.
3. கதிரவன் காலையில் கிழக்கே ...உதிக்கும்...
4. நாள்தோறும் செய்தித்தாள்...படிக்கும்...வழக்கம் இருக்க வேண்டும்.




**II. ஓர் எழுத்துச் சொற்களால் நிரப்புக.**

1. ...ஆ... புல்லை மேயும்.
2. ...தீ... சுடும்.
3. ...நா... பேசும்.
4. ...ஈ... பறக்கும்.
5. ...பூ... மணம் வீசும்.

**III. பின்வரும் எழுத்துகளுக்குப் பொருள் எழுதுக.**

(எ.கா.) தா – கொடு

| | |
|---|---|
| தீ........ | விடை : நெருப்பு |
| பா........ | விடை : பாடல் |
| தை........ | விடை : தைத்தல் |
| வை........ | விடை : வை |
| மை........ | விடை : அஞ்சனம் |

**IV. பின்வரும் சொற்களை இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.**

ஆறு, விளக்கு, படி, சொல், கல், மாலை, இடி

(எ.கா.) ஆறு – ஈ ஆறு கால்களை உடையது.
தஞ்சாவூரில் காவிரி ஆறு பாய்கிறது.

1. விளக்கு – கார்த்திகை திருநாளன்று அனைவரும் வீட்டில் விளக்கு ஏற்றுவர் கல்வி ஓர் ஒளி விளக்கு.
2. படி – வீட்டில் படி அமைப்பர். மூத்தோர் சொல்படி நடக்க வேண்டும்.
3. சொல் – கபிலனிடம் கேட்டதைச் சொல். முருகன் என்பது பெயர்ச்சொல்.
4. கல் – வீடு கட்டத் தேவை கல். இளமையில் கல்.
5. மாலை – சூரியன் மறையும் வேளை மாலை. ஆண்டாள் சூடியது பூ மாலை.
6. இடி – மழை வரும்போது வருவது இடி. உரலில் நெல்லை போட்டு இடி.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



# செலக்சன்

## 7 ஏழாம் வகுப்பு தமிழ்

## மூன்றாம் பருவம்

**மனப்பாடப்பகுதி**

**இயல்.1**

**விருந்தோம்பல்**

மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு – நீர் உலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவாக நல்கினாள்
ஒன்றுறா முன்றிலோ இல் **– முன்றுரை அரையனார்**

**இயல்.2**

**புதுமை விளக்கு**

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர் ஆழி நீங்குகவே என்று **– பொய்கை ஆழ்வார்**

**அறம் என்னும் கதிர்**

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய் **– முனைப்பாடியார்**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இயல் ஒன்று

## 1. நயத்தகு நாகரிகம்

### கவிதைப் பேழை

இயல் ஒன்று

## 1.அ. விருந்தோம்பல் –செய்யுள்

### மதிப்பீடு

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மரம் வளர்த்தால்...................பெறலாம்.**

அ) மாறி ஆ) மாரி இ) காரி ஈ) பாரி **விடை : ஆ) மாரி**

**2. "நீருலையில்" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது...........**

அ) நீரு + உலையில் ஆ) நீர் + இலையில்

இ) நீர் + உலையில் ஈ) நீரு + இலையில் **விடை : இ) நீர் + உலையில்**

**3. மாரி + ஒன்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்.......**

அ) மாரியொன்று ஆ) மாரிஒன்று

இ) மாரியின்று ஈ) மாரியன்று **விடை : அ) மாரியொன்று**

**II. குறுவினா**

**1. பாரி மகளிரின் பெயர்களை எழுதுக.**

**விடை :** பாரி மகளிரின் பெயர்கள் அங்கவை, சங்கவை ஆகும்.

**2. " பொருள் ஏதும் இல்லாத வீடுகளே இல்லை " – எவ்வாறு ?**

**விடை :** மழையின்றி வறட்சி நிலவிய காலத்தில் பாரிமகளிர், இரந்து நின்ற பாணர்களுக்கு உலைநீரில் பொன்இட்டு கொடுத்தனர். அதனால் பொருள் ஏதும் இல்லாத வீடு எதுவும் இல்லை என்பதை அறியலாம்.

**III. சிந்தனை வினா**

**தமிழர்களின் பிற பண்பாட்டுக் கூறுகளை எழுதுக.**

**விடை :** 1. விருந்தோம்பல் 2. காதல் 3. வீரம் 4. நட்பு 5. ஈகை 6. கொடை 7. கற்புடைமை 8. உலக ஒருமைப்பாடு

### கூடுதல் வினாக்கள் – விடைகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மாரி என்பதைக் குறிக்கும் சொல்.........**

அ) குழை ஆ) மழை இ) கழை ஈ) தழை **விடை : ஆ) மழை**

**2. முன்றில் என்னும் சொல்லின் பொருள்**

அ) திண்ணை ஆ) மண்ணை இ) கண்ணை ஈ) விண்ணை **விடை : அ) திண்ணை**

**3. பழமொழி நானூறு நூலின் ஆசிரியர்**

அ) முன்றுறை அரையனார் ஆ) மருதன் இளநாகனார்

இ) நம்பியாண்டவர் நம்பி ஈ) சீத்தலைச் சாத்தனார் **விடை : அ)முன்றுறை அரையனார்**

**4. வறண்டிருந்த என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது..............**

அ) வறண் + டிருந்த ஆ) வறண்டி + ருந்த

இ) வறண்டு + இருந்த ஈ) வறண்டு + ஈருந்த **விடை : இ) வறண்டு + இருந்த**

**5. ஒன்று + இன்றி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.........**

அ) ஒன்றன்றி ஆ) ஒன்றியன்றி

இ) ஒன்றென்றி ஈ) ஒன்றின்றி **விடை : ஈ) ஒன்றின்றி**

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் ஒன்று**

## 1.எ . மொழியோடு விளையாடு – மொழிப்பயிற்சி

**I. குறுக்கெழுத்துப் புதிர்.**

**தமிழ்நாட்டில் உள்ள ஊர்ப் பெயர்களையும் அவற்றின் சிறப்பையும் அறிவோம்.**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ப் | பூ | ர் | | ஊ 2 | த | கை |
| ண் | | சி | ச் | ரு | 3 தி | | க 4 | |
| டு | கா | ற் | 5 ஏ | | ரு | செ | ன் | னை |
| க் | | | | ல் | வா | | னி | |
| க | சி | | | ன | ரூ | ர் | யா | மு 7 |
| ல் | கா | க் | ரை | கா 8 | ர் | க | கு | ண் |
| | வ | | து | க் | | ந | ம | ட |
| | 9 சி | | ம 10 | டை | | து | ரி | ந் |
| டு | ரோ | ஈ 11 | | 12 கொ | | ரு | | து |
| த 13 | ஞ் | சா | வூ | ர் | | 14 வி | | றை |

**இடமிருந்து வலம் :–**

1. பின்னலாடை நகரம் – **விடை : திருப்பூர்**
2. மலைகளின் அரசி – **விடை : உதகை**
6. தமிழகத்தின் தலைநகரம் – **விடை : சென்னை**
13. நெற்களஞ்சியம் – **விடை : தஞ்சாவூர்**

**வலமிருந்து இடம் :–**

3. மலைக்கோட்டை நகரம் – **விடை : திருச்சி**
5. ஏழைகளின் ஊட்டி – **விடை : ஏற்காடு**
8. மாங்கனித் திருவிழா – **விடை : காரைக்கால்**
11. மஞ்சள் மாநகரம் – **விடை : ஈரோடு**

**மேலிருந்து கீழ்**

1. பூட்டு நகரம் – **விடை : திண்டுக்கல்**
3. தேர் அழகு நகரம் – **விடை : திருவாரூர்**
4. தெற்கு எல்லை – **விடை : கன்னியாகுமரி**
7. புலிகள் காப்பகம் – **விடை : முண்டந்துறை**

**கீழிருந்து மேல்**

9. பட்டாசு நகரம் – **விடை : சிவகாசி**
10. தூங்கா நகரம் – **விடை : மதுரை**
12. மலைகளின் இளவரசி – **விடை : கொடைக்கானல்**
14. கர்மவீரர் நகரம் – **விடை : விருதுநகர்**

---

**II. தொடருக்குப் பொருத்தமான உவமையை எடுத்து எழுதுக.**

**1. என் தாயார் என்னை........................காத்து வளர்த்தார்.**
**(கண்ணை இமை காப்பது போல / தாயைக் கண்ட சேயைப் போல)**
**விடை :** என் தாயார் என்னை கண்ணை இமை காப்பது போல காத்து வளர்த்தார்.

---

**2. நானும் என் தோழியும்........................இணைந்து இருப்போம்.**
**(இஞ்சி தின்ற குரங்கு போல / நகமும் சதையும் போல)**
**விடை :** நானும் என் தோழியும் நகமும் சதையும் போல இணைந்து இருப்போம்.

---

**3. திருவள்ளுவரின் புகழை......................உலகமே அறிந்துள்ளது.**
**(எலியும் பூனையும் போல / உள்ளங்கை நெல்லிக்கனி போல)**
**விடை :** திருவள்ளுவரின் புகழை உள்ளங்கை நெல்லிக்கனி போல உலகமே அறிந்துள்ளது.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**இயல் மூன்று** — **3. மானுடம் வெல்லும்**

**கவிதைப்பேழை**

**இயல் மூன்று** — **3.அ. மலைப் பொழிவு** –செய்யுள்

**மதிப்பீடு**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. மனித வாழ்க்கையில் தேவைப்படுவது............**

அ) பணம் ஆ) பொறுமை இ) புகழ் ஈ) வீடு **விடை : ஆ) பொறுமை**

**2. சாந்த குணம் உடையவர்கள்...............முழுவதையும் பெறுவர்.**

அ) புத்தகம் ஆ) செல்வம் இ) உலகம் ஈ) துன்பம் **விடை : இ) உலகம்**

**3. " மலையளவு "என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது............**

அ) மலை + யளவு ஆ) மலை + அளவு

இ) மலையின் + அளவு ஈ) மலையில் + அளவு **விடை : ஆ) மலை + அளவு**

**4. " தன்னாடு " என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.............**

அ) தன் + னாடு ஆ) தன்மை + னாடு

இ) தன் + நாடு ஈ) தன்மை + நாடு **விடை : இ) தன் + நாடு**

**5. இவை + இல்லாது என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்...........**

அ) இவையில்லாது ஆ) இவை இல்லாது

இ) இவயில்லாது ஈ) இவஇல்லாது **விடை : அ) இவையில்லாது**

**II. பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. சாந்தம் | – | சிறப்பு |
| 2. மகத்துவம் | – | உலகம் |
| 3. தாரணி | – | கருணை |
| 4. இரக்கம் | – | அமைதி |

**விடைகள் :**

| | | |
|---|---|---|
| **1. சாந்தம்** | – | **அமைதி** |
| **2. மகத்துவம்** | – | **சிறப்பு** |
| **3. தாரணி** | – | **உலகம்** |
| **4. இரக்கம்** | – | **கருணை** |

**III. குறுவினா**

**1. இந்த உலகம் யாருக்கு உரியது ?**

**விடை:** இந்த உலகம் முழுவதும் சாந்தம் என்னும் அமைதியான பண்பு கொண்டவர்களுக்கே உரியது.

**2. உலகம் நிலைதடுமாறக் காரணம் என்ன ?**

**விடை:** உலகம் சாதிகளாலும் கருத்து வேறுபாடுகளாலும் நிலை தடுமாறுகிறது.

**3. வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற என்ன செய்ய வேண்டும் ?**

**விடை:** வாழ்க்கை மலர்ச்சோலையாக மாற மனிதன் தூய உள்ளத்தோடு வாழ வேண்டும்.

**IV. சிறுவினா**

**சாந்தம் பற்றி இயேசுகாவியம் கூறுவன யாவை ?**

**விடை : சாந்தம் பற்றி இயேசு காவியம் கூறுவன:**

★ இந்த உலகம் முழுவதும் சாந்தம் என்னும் அமைதியான பண்பு கொண்டவர்களுக்கே உரியது. அவர்களே தலைவர்கள் ஆகின்றனர்.

★ மனித வாழ்க்கையில் மிகவும் தேவைப்படுவது பொறுமை ஆகும். அது மண்ணையும் விண்ணையும் ஆளச் செய்யும் மகத்துவமானது.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**V. கடிதம் எழுதுக.**

**உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவைக் காண வருமாறு அழைப்பு விடுத்து உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.**

3, பாரதியார் தெரு,
நாகமலை
மதுரை
தேதி........................

அன்புள்ள மாமா ! வணக்கம்.

இங்கு நானும் என் பெற்றோரும் நலமாய் உள்ளோம். இதுபோல் அங்கு தங்களுடைய நலனும், குடும்பத்தார் நலனும் அறிய ஆவல்.

எங்கள் மதுரை மாநகரில் ஆண்டுதோறும் விழாக்கள் நடந்த வண்ணமாகவே உள்ளன ! அவற்றின் மணிமுடியாய் விளங்குவது சித்திரைத் திருவிழாவாகும். இவ்விழா ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் வளர்பிறையில் 10 நாட்கள் கொண்டாடப்படுகிறது.

இவ்விழா நாள்களில் மதுரை மாநகரம் திருவிழாக் கோலத்துடன் திகழும். மீனாட்சியம்மன் திருக்கல்யாணம், இறைவன், இறைவி திருத்தேர் வீதி உலா வருதல், பூப்பல்லக்கு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்.

அழகர்கோவிலிலிருந்து கள்ளழகர் மதுரை வரும்போது நிகழும் எதிர்சேவை, கண் கொள்ளாக் காட்சியாகும். எல்லாவற்றிற்கும் மேலாகப் பௌர்ணமி நாளன்று கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் திருக்காட்சியைப் பல இலட்சம் மக்கள் கண்டு களிப்பர். இவ்விழாவினையொட்டிப் பொருட்காட்சி, சர்க்கஸ், இசைநிகழ்ச்சி, நாடகம், பட்டிமன்றம், ஆடல்பாடல்கள், போன்றவை நடைபெறும். ஆதலால், நீங்களும் குடும்பத்துடன் வந்து இவற்றையெல்லாம் கண்டு மகிழவேண்டும். உடனே புறப்பட்டு வாருங்கள்.

இப்படிக்கு
அன்பு மருமகன்
ப.குமரன்

உறைமேல் முகவரி,
ம.கந்தன்
40, முருகன் கோயில் தெரு,
மணப்பாறை,
திருச்சிமாவட்டம் – 620 040

---

**இயல் மூன்று** **3.எ. மொழியோடு விளையாடு** – மொழிப்பயிற்சி

**I. குறிப்புகளைப் பயன்படுத்தி இடமிருந்து வலமாகக் கட்டங்களை நிரப்புக.**

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நூ | ல் | க | ள் | | | | | |
| | | | | தி | ரு | க் | கு | ற | ள் | | | | |
| | | | அ | ற | நெ | றி | ச் | சா | ர | ம் | | | |
| | | கு | ற் | றா | ல | க் | கு | ற | வ | ஞ் | சி | | |
| தி | ரி | கூ | ட | ரா | ச | ப் | ப | க் | க | வி | ரா | ய | ர் |
| | | சு | ப் | பு | ர | த் | தி | ன | தா | ச | ன் | | |
| | | | கு | ம | ர | கு | ரு | ப | ர | ர் | | | |
| | | | | பா | ர | தி | தா | ச | ன் | | | | |
| | | | | | நூ | ல | க | ம் | | | | | |


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



1. நூலகத்தில் இருப்பவை ............நூல்கள் நிறைந்துள்ள இடம்.............. **விடை : நுல்கள், நூலகம்**
2. உலகப்பொதுமறை.............புரட்சிக்கவிஞர்.......................... **விடை : திருக்குறள், பாரதிதாசன்**
3. முனைப்பாடியார் இயற்றியது....................நீதிநெறி விளக்கம் பாடியவர்........................ **விடை : அறநெறிச்சாரம், குமரகுருபரர்**
4. குற்றால மலைவளத்தைக் கூறும் நூல்..........................சுரதா என்பதன் விரிவாக்கம்........................ **விடை : குற்றாலக்குறவஞ்சி, சுப்புரத்தினதாசன்**
5. குற்றாலக் குறவஞ்சி பாடியவர்............................ **விடை : திரிகூடராசப்பக்கவிராயர்.**

**II. கீழ்க்காணும் படங்களைப் பார்த்து இரட்டைக்கிளவி அமையுமாறு தொடர் உருவாக்குக.**






**(எ.கா.) மழை சடசட வெனப் பெய்தது.**

**விடை :** 1. பறவைகள் <u>படபட</u> வெனச் சிறகை விரித்து பறந்தன.
2. தொடர்வண்டி <u>தடதட</u> என்ற ஓசையுடன் சென்றது.
3. மரம் <u>மடமட</u> வென முறிந்தது.

**III. கீழ்க்காணும் அறிவிப்பைப் படித்து அதன்பின் கேட்கப்படும் வினாக்களுக்கு விடையளிக்க.**

**தீ விபத்தும் பாதுகாப்பு முறைகளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

★ வீடுகளிலும் பொது இடங்களிலும் தீ பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப் பட்டிருக்கவேண்டும்.
★ பொது இடங்களில் தீத்தடுப்பு எச்சரிக்கை ஒலிப்பான்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
★ எச்சரிக்கை ஒலி எவ்வாறு இருக்கும் என்பதைப் பணியாளர்கள் அறிந்திருக்கவேண்டும்.
★ தரமான மின் சாதனங்களையே பயன்படுத்தவேண்டும்.
★ சமையல் செய்யும் போது இறுக்கமான ஆடைகளை உடுத்திக் கொள்ள வேண்டும்.
★ பட்டாசுகளைப் பாதுகாப்பான இடங்களில், பெரியவர்களின் மேற்பார்வையில் தான் வெடிக்க வேண்டும்.
★ நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தீத்தடுப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.
★ பொதுமக்கள் கூடும் இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக வெளியேறும் வகையில் அவசரகால வழிகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**தீ விபத்து ஏற்பட்டால் செய்ய வேண்டியவை :**

★ உடனடியாகத் தீயணைப்பு மீட்புப் பணித் துறைக்குத் தொலைபேசி வழியாகத் தகவல் தெரிவிக்க வேண்டும்.
★ அவ்வாறு தகவல் தெரிவிக்கும் பொழுது தீவிபத்து ஏற்பட்டுள்ள இடத்தினைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.
★ தீ விபத்து ஏற்பட்டு இருக்கும் பகுதியில் உடனடியாக மின் இணைப்பைத் துண்டிக்கவேண்டும்.
★ தீ விபத்து ஏற்பட்ட உடனே அங்குள்ள தீயணைப்பான்களைக் கொண்டு ஆரம்பக் கட்டத்திலேயே தீயை அணைக்க முயற்சி செய்யவேண்டும்.
★ உடுத்தியிருக்கும் ஆடையில் தீப்பிடித்தால் உடனே தரையில் படுத்து உருளவேண்டும்.
★ தீக்காயம் பட்ட இடத்தை உடனடியாகத் தண்ணீரைக் கொண்டு குளிர வைக்க வேண்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



★ பொது இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் பதற்றமடைந்து ஓடாமல். அவசரகால வழியில் வெளியேற வேண்டும்.
★ அருகில் இருக்கும் கட்டடங்களுக்குத் தீ பரவாமல் இருக்கும் வகையில் முன்னெச்சரிக்கை செய்ய வேண்டும்.








**தீ விபத்து ஏற்படும் போது செய்யக் கூடாதவை :**

★ தீ விபத்து ஏற்பட்டுள்ள கட்டடத்தின் மின் தூக்கியைப் பயன்படுத்தக்கூடாது.
★ எண்ணெய் உள்ள இடத்தில் ஏற்பட்ட தீயை அணைக்கத் தண்ணீரைப் பயன்படுத்தக் கூடாது.
★ தீக்காயம் பட்ட இடத்தில் எண்ணெய், பேனா மை போன்றவற்றைத் தடவக்கூடாது.

**வினாக்கள் – விடைகள் :**

**1. தீ விபத்தினால் பெரிய பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு, செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை ?**

**விடை :**

★ வீடுகளிலும், பொது இடங்களிலும் தீ பாதுகாப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
★ பொது இடங்களில் தீத்தடுப்பு எச்சரிக்கை ஒலிப்பான்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.
★ எச்சரிக்கை ஒலி எவ்வாறு இருக்கும் என்பதைப் பணியாளர்கள் அறிந்திருக்க வேண்டும்.
★ தரமான மின்சாதனங்களையே பயன்படுத்த வேண்டும்.
★ சமையல் செய்யும்போது இறுக்கமான ஆடைகளை உடுத்திக் கொள்ள வேண்டும்.
★ பட்டாசுகளைப் பாதுகாப்பான இடங்களில், பெரியவர்களின் மேற்பார்வையில்தான் வெடிக்க வேண்டும்.
★ நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்குத் தீத்தடுப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

**2. தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாகச் செய்ய வேண்டிய செயல்கள் யாவை ?**

**விடை :**

★ உடனடியாகத் தீயணைப்பு மீட்புப் பணித்துறைக்குத் தொலைபேசி வழியாகத் தகவல் தெரிவிக்க வேண்டும்.
★ அவ்வாறு தகவல் தெரிவிக்கும் பொழுது தீ விபத்து ஏற்பட்டுள்ள இடத்தினைத் தெளிவாய்த் தெரிவிக்க வேண்டும்.
★ தீ விபத்து ஏற்பட்டிருக்கும் பகுதியில் உடனடியாய் மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டும்.
★ தீ விபத்து ஏற்பட்ட உடனே அங்குள்ள தீயணைப்பான்களைக்கொண்டு ஆரம்பக் கட்டத்திலேயே தீயை அணைக்க முயற்சி செய்ய வேண்டும்.

**3. பொது இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் வெளியேறும் முறையைக் கூறுக.**

**விடை :**

★ பொது மக்கள் கூடும் இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக வெளியேறும் வகையில் அவசரகால வழிகள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.
★ பொது இடங்களில் தீ விபத்து ஏற்பட்டால் பதற்றமடைந்து ஓடாமல், அவசரகால வழியில் வெளியேற வேண்டும்.

**4. தீ விபத்து ஏற்பட்டால் செய்யக் கூடாதவை யாவை ?**

**விடை :**

★ தீ விபத்து ஏற்பட்டுள்ள கட்டடத்தின் மின் தூக்கியைப் பயன்படுத்தக்கூடாது.
★ எண்ணெய் உள்ள இடத்தில் ஏற்பட்ட தீயை அணைக்கத் தண்ணீரைப் பயன்படுத்தக் கூடாது.
★ தீக்காயம் பட்ட இடத்தில் எண்ணெய், பேனா மை போன்றவற்றைத் தடவக்கூடாது.

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**5. உடலில் தீப்பற்றினால் செய்ய வேண்டிய முதலுதவி யாது ?**
**விடை :**
★ உடுத்தியிருக்கும் ஆடையில் தீப்பிடித்தால் உடனே தரையில் படுத்து உருளவேண்டும். தீக்காயம் பட்ட இடத்தை உடனடியாகத் தண்ணீரைக் கொண்டு குளிர வைக்க வேண்டும்.

**IV. நிற்க அதற்குத் தக....**
**என் பொறுப்புகள்....**
1. நான் எப்போதும் எளிமையைக் கடைப்பிடிப்பேன்.
2. அனைவரிடமும் அன்புடன் நடந்து கொள்வேன்.
3. என் பணிகளை நேர்மையாகச் செய்வேன்.
4. நான் என்றும் பொறுமையுடன் இருப்பேன்.

**V. கலைச்சொல் அறிவோம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சமயம் | – | **Religion** | தத்துவம் | – | **Philosophy** |
| எளிமை | – | **Simplicity** | நேர்மை | – | **Integrity** |
| ஈகை | – | **Charity** | வாய்மை | – | **Sincerity** |
| கண்ணியம் | – | **Dignity** | உபதேசம் | – | **Preaching** |
| கொள்கை | – | **Doctrine** | வானியல் | – | **Astronomy** |

**VI. இணையத்தில் காண்க.**
**மனிதநேயத்தை வலியுறுத்தும் நிகழ்வுகளை இணையத்தில் தேடிக் காண்க.**
**மனிதநேயம் :–**

மனிதன் – இது வெறும் வார்த்தை அல்ல. இயற்கையின் உச்சகட்ட படைப்பு, பலகோடி ஆண்டு பரிணாம வளர்ச்சியின் விளைவால் இயற்கைக்குக் கிடைத்த மாபெரும் பரிசு மனிதன் ஆவான். வரம்பிலா வலிமை பெற்ற மனிதன் மனிதநேயம் எனும் மகுடத்தை சூடினால் மட்டுமே வைரமாய் மிளிர்கிறான்.

மனிதநேயம் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது நம்மில் பலரும் இதுவரை நேரில் கூட கண்டிராத அன்னைத் தெரசாவும், நெல்சன் மண்டேலாவும், ஹெலன் கெல்லரும் போன்ற சான்றோர்கள் தான்.

மனிதநேயம் என்பது இவர்களின் கையடக்கப் பொருளா ! பிறகு ஏன் இவர்கள் பளிச்சென்ற உதாரணமாகத் தோன்றவேண்டும். ஏனெனில் இவர்கள் " தனக்குப் போகத் தான் தானமும் தருமமும் " என்ற தகைமையைத் தாண்டி தன் வாழ்வை முழுவதுமாக சமூக பணிகளுக்காக அர்ப்பணித்துக் கொண்டது தான் நாம் யாரும் அவ்வளவு உயரத்திற்குக் கூட செல்ல வேண்டியதில்லை. நம் கண் முன்னே நடக்கும் அன்றாட நிகழ்வுகளில் நம் உதவி தேவைப்படுவோருக்கு நம்மால் இயன்ற அளவு அதனைச் செய்யலாமே!

www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# செலக்சன்

எங்கள் வெளியீடுகள்

3 முதல் 10 வகுப்பு வரை

தமிழ்

ஆங்கிலம்

கணக்கு

அறிவியல்

சமூக அறிவியல்

3 முதல் 6 வகுப்பு வரை 5 in 1

தமிழ் வழி & ஆங்கில வழி

**அன்பு நிலையம்**

129, வடக்கு ஆவணி மூல வீதி

மதுரை - **625001**

94430 43338

94430 46662

www.Padasalai.Net